பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மார்கழி 25 (9—1—68) செவ்வாய் ★ வெளியூர்: மார்கழி 26 (10—1—68) புதன் [இதழ்: 173

பாரிசில்--

இலங்கையில் உலகத் தமிழ் மாநாடு

முதல் உலகத் தமிழ் மாநாடு கோலாலம்பூரில் நடைபெற்றது. இரண்டாவது மாநாடு சென்னையில் நடைபெறுகிறது.

"மூன்றாவது மாநாடு பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசில் நடைபெறும்" என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"நான்காவது மாநாடு, இலங்கையில் நடக்கும்" என்று இலங்கைப் பிரதிநிதியாக வந்திருக்கும் திரு. சிவசிதம்பரம் கூறினர்.

பழமையிலேயே மூழ்கியிருப்பதா?

பண்டைப் பெருமை பற்றிப் பேசிப் பயனென்ன?

'செயலாற்ற வாரீர்' -- மகளிருக்கு சத்தியவாணிமுத்து அழைப்பு

சென்னை, சன. 8—

பண்டைய நாளில் தமிழக மகளிர் சீரும் சிறப்புமாக வாழ்ந்ததைப் பற்றி நாம் பேசுகிறோம்; 'எப்படி வாழ வேண்டும்' என்பதனைப் பற்றியும் பேசுகிறோம்; ஆனால் செயலில் அதன்படி நடப்பதில்லை; இன்னும் பழைமையிலேயே மூழ்கியிருக்கிறோம் -- பழைமைக்கே அடிமையாக இருக்கிறோம்!

பழைமைச் சிறப்புக்களைப் பற்றி நாம் நினைவுபடுத்திக் கொள்ளும்போது, மீண்டும் அந்தப் பெருமையை நிலைநாட்டுவதற்கு நாம் அரும்பணி ஆற்றவேண்டும்"

என்று, பூம்புகார் நகரில் நடைபெறும் உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சியின் சொற்பொழிவுத் தொடரில் ஆற்றிய சிறப்புரையில் அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்.

தடையாக உள்ளதை தகர்த்தெறிய வாரீர்!

'மகளிர் மாண்பு' எனும் தலைப்பில் நடைபெற்ற சொற்பொழிவுத் தொடரில், அமைச்சர் மேலும் விளக்கிக் கூறியதாவது:—

"இன்று தமிழ் மகிழும் வகையில் பெண்களாக வந்து நிற்கிறோம்! பெண்கள் வீட்டிற்கு மட்டும் அரசிகள் அல்லர்; அவர்கள், தமிழைக் காப்பதற்குத் தமிழரசிகளாக இருக்கவேண்டும்.

சட்டம் படித்து — இலக்கியம் படித்து — பிழைப்புக்கும் வாழ்க்கைக்கும் அதைப் பயன்படுத்துகிறோமே தவிர, அதன் பெருமையை உணர்ந்து அதன் புகழைப் பரப்ப மகளிர் இன்னும் முன்வரவில்லை! விரல்விட்டு எண்ணும் அளவில் ஒரு சிலர்தான் முன்வந்திருக்கிறார்கள்!

பெரும்பான்மை மகளிர், நல்ல காரியங்களைச் செய்வதற்குத் துணிவாக ஒத்துழைப்புத் தருவதில்லை!

இந்த மாநாட்டிற்கு வந்து செல்லும் நாம், இனி, நம் பண்பாட்டுச் சிறப்பைச் சிறப்பாக வளர்க்க வேண்டும்; இதனை எண்ணிப்பார்த்துச் செயல்படவேண்டும்; பழைய சிறப்பு வாழ்வைப் பெறவேண்டும்; அதற்குத் தடையாக உள்ளதை உடைத்தெறிய வேண்டும்.

தமிழகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த சிறப்பை மீண்டும் பெற நாம் பாடுபடவேண்டும்; அதற்கு மகளிர் முன்வர வேண்டும்."

சோதனையைத் தாங்குகிறது தமிழர் உள்ளம்!

"'அடுப்படியில் இடுப்பொடியக் கிடந்து காலத்தை வீணாக்கக் கூடாது' என்று காந்தியாரே கூறியிருக்கிறார்; எனவே, மகளிர், மாண்புடையவர்களாக வாழ்வதற்குப் பயில வேண்டும்"

என்று கேட்டுக்கொண்டு தொடக்கவுரையாற்றிய திருமதி இராதா தியாகராசன், தமது உரையில் கூறியதாவது:—

"அன்று தமிழ் வளர்த்தது கழகம்; இன்றும் தமிழ் வளர்ப்பது கழகம்!

அநீதியாளர்களை இந்த உலகம் தாங்கிக் கொண்டிருப்பதைப் போல், தமிழர்களுடைய பெரும் உள்ளம் தமிழுக்கு வரும் சோதனையை இதுவரையில் பொறுத்து வந்தது; அதைச் சோதிக்கும் வகையில் மொழிச் சிக்கல் நீடித்துக்கொண்டே இருக்கிறது!

இந்தச் சிக்கல்களை அகற்றும் திறம்படைத்த தமிழக அரசு அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்."

பயன் கருதிப் பணியாற்றினல் தொண்டாகுமா?

"மகளிர், தொண்டு மனப்பான்மையும் — தாய்மை உணர்வும் — கடமை உள்ளமும் பெற்றிருக்கவேண்டும்; பயன் கருதிப் பணியாற்றினல் அது தொண்டாகாது; 'வேலை' என்றுதான் அதைக் கூறலாம்"

என்று, திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் சுட்டிக்காட்டினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"ஒரு பெண் நற்பண்புகள் நிறைந்தவளாக இருந்தால்தான் அந்த வீடு எல்லாம் நிறைந்ததாக இருக்கும்; அதில்லையேல், 'ஏதும் இல்லை' என்பதுதான் கருத்து.

பெண்கள் எங்கோ பிறந்து— எங்கோ சென்று வாழ்ந்து கடமைகளைச் செய்வதனால்தான், பெண்மைக்குத் தனி மதிப்பு இருக்கிறது!

தாய்மையின் சிறப்பையும், மகளிர் அன்பையும், ஆற்றலையும் வீரத்தையும் நம் இலக்கியங்களில் நிறையக் காணலாம்.

"கல்வியறிவு இல்லாத பெண்கள், களர் நிலத்திற்குச் சமம்" என்று புரட்சிக் கவி பாரதிதாசன் கூறியிருக்கிறார்; அதனை உணர்ந்து பெண்கள் தங்கள் குடும்பத்திற்கு ஏற்றபடி கல்வி கற்றுச் சிறந்து விளங்க வேண்டும்.

"மங்கையராக பிறந்திடவே நல்ல மாதவம் செய்திடவேண்டும்" என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கூறியிருப்பதிலிருந்து மகளிர் மாண்பை அறிய முடிகிறது!

மகளிர் மாண்புணர்ந்து, மகளிரெல்லாம் மாண்புடைய மகளிராக விளங்க வேண்டும்."

பெருமையை நிலைநாட்ட முன் வாரீர்!

செல்வி எஸ். பி. சற்குணம் பேசுகையில் கூறியதாவது:—

"பெண்கள் ஆடவரை இதயமாகக் கொண்டிருக்கிறார்கள்; ஆடவர் பெண்களை தங்கள் விழியாகக் கொண்டிருக்கிறார்கள்.

முட்செடியிலே இனிய கனியைக் காணமுடியாது! எருக்கஞ் செடியிலே திராட்சைக் கொத்தைப் பார்க்கமுடியாது! அதுபோல், தமிழ்ப் பெண்களுக்கு இருக்கும் மாண்பு வேறு எங்கும் இருக்கமுடியாது! அந்தப் பெருமையை நிலைநாட்ட நாம் வாழ்ந்துகாட்ட வேணடும்!"

மகளிருக்குச் சிறப்புத் தந்தது தமிழகம்தான்!

செல்வி கஸ்தூரி பேசும்போது கூறியதாவது:—

"தமிழ் வாழத் தான் வாழும் பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ் உள்ளளவும் வாழ்வார்!

அத்தகைய பெருந்தகையை ஈன்றுதந்து உருவாக்கிக்கொடுத்தது மகளிர் குலம்தான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

எந்த நாட்டிலும் கொடுக்காத சிறப்பை, பெணகளுக்குத் தருவது தமிழகம்தான்!

கண்ணகி, கோப்பெருந்தேவி போன்றவர்கள், நம் மாண்பைக் காட்டியிருக்கின்றார்கள்."

மிருதுவானவர்கள்-- ஆனல் உறுதி மிக்கவர்கள்!

திருமதி இலட்சுமி கிருஷ்ணமூர்த்தி பேசுகையில் குறிப்பிட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

இந்த நிலையை அன்று ஏன் கூறவில்லை?

அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் பதவியிலிருந்த காலம் வரையில் குறிப்பிட்டுக் கூறாததை, இன்று பதவியிலிருந்து விலகுகையில், காமராசர், காங்கிரசு 71-வது மாநாட்டின் பொருளாய்வுக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டி உணர்த்தியிருக்கிறார்; அது வருமாறு:—

"தேசியச் செல்வம் நியாயமாகப் பகிர்ந்தளிக்கப்படும் என்ற உறுதி ஏற்படவில்லையென்றால், நாட்டுக்காகப் பாடுபட்டு உழைக்க வேண்டுமென்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்படாது!

"உழைப்பின் பலன் தங்களுக்குக் கிடைக்குமென்ற உறுதி ஏற்படாவிடில், பாடுபடுவதற்கு மக்கள் முன்வரமாட்டார்கள்."

கட்டுக்கோப்பு சிதறுமாம்!

"நாட்டுப் பற்று குன்றிவருகிறது; வட்டார -- மாநில உணர்வு அதிகரித்து வருகிறது; இந்தப் போக்கைக் களையாவிடில், இந்தியாவை ஒரே நாடாகக் கட்டிக் காப்பது கடினமாகி விடும்; 'தனி நாடாக வேண்டும்' எனக் கோரும் அளவுக்கு வட்டார உணர்ச்சி வளருவதற்கு இடங் கொடுத்துவிட்டால், ஒருங்கிணைந்த நாட்டின் கட்டுக்கோப்பு சிதறிவிடும்."

பள்ளிகளுக்கு ரூ. 10-இலட்சம் உதவி

தமிழக அரசு வழங்குகிறது

நெல்லை, சன. 8—

தமிழக அரசு, துவக்கப் பள்ளிகள், உயர் துவக்கப் பள்ளிகள் ஆகியவற்றிற்கான இன்றியமையாப் பொருள்களை வாங்குவதற்கென ரூ. 10-இலட்சம் ஒதுக்கியுள்ளது.

இந்தத் தொகை துவக்கப் பள்ளிகளுக்கு ரூ. 300 வீதமும், உயர் துவக்கப் பள்ளிகளுக்கு ரூ. 1,000 வீதமும் பகிர்ந்தளிக்கப்படும்.

இந்த உதவித் தொகையை ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1,122 துவக்கப் பள்ளிகளும், 394 உயர் துவக்கப் பள்ளிகளும் பெறும்.

70 உதவி பெறும் துவக்கப் பள்ளிகளுக்கும் 658 நகராட்சிப் பள்ளிகளுக்கும், 100 மாநகராட்சி துவக்கப் பள்ளிகளுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 50 அரசு துவக்கப் பள்ளிகளுக்கும், 6 மாநகராட்சி உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் இவ்வுதவித் தொகை வழங்கப்படும்.

நெல்லை மாவட்டத்திலுள்ள 99 துவக்கப் பள்ளிகளுக்கும், 39 உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் ரூ. 68,700, அரசு ஆணைப்படி கிடைக்கும்.

இருபதாண்டுக் கால காங்கிரசு ஆட்சியின் இலட்சணம்

பதவி பறிபோனபின் உணரும் விசித்திரம்!

"காங்கிரசால் மக்களுக்கு நன்மை செய்ய இயலும் என்று பொதுமக்களிடம் நல்ல கருத்தை ஏற்படுத்தும் பொருட்டு, காங்கிரசை நவீனமயமாக்க வேண்டும்.

"காங்கிரசு இதுவரையில் மக்களுடைய நம்பிக்கையை நிறைவு செய்யவில்லை; அதனால்தான் அவர்களுக்கு, சில மாநிலங்களில் அமைச்சரவைகளை மாற்றுவதற்கு வேண்டிய துணிச்சல் ஏற்பட்டது.

"விளைவுகளைப் பரிசீலனை செய்யாமல் இடைக்கால முடிவுகளை மேற்கொள்வதற்குப் பதில், நிலைமையைப் பரிசீலித்து மாற்றுப் பரிகாரங்கள் காணவேண்டும்."

--சி. சுப்பிரமணியம்
(காங்கிரசு மாநாட்டில்)

ஐ. நா. பேரவையில் நடந்த கூட்டங்கள்

ஐ. நா. பேரவை 1954-ம் ஆண்டு 2,373 கூட்டங்களை நடத்தியிருக்கிறது; ஆனல், 1967-ம் ஆண்டில் 5,388 கூட்டங்கள் நடந்திருக்கின்றன.

1967-ம் ஆண்டில் மட்டும் ஜெனிவாவில் 2,896 கூட்டங்களை நடத்தியிருக்கும் ஐ.நா. பேரவை, தலைமை இடமான நியூயார்க்கில் 2492 கூட்டங்களைத்தான் நடத்தியிருக்கிறது. அதிகமான கூட்டங்கள் நடப்பதற்குக் காரணம், நடவடிக்கைகளை பல மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டியிருப்பதுதான்.

1967-ம் ஆண்டில் ஆங்கிலத்தில் 2,150; பிரெஞ்சு மொழியில் 4,915; ஸ்பானிஷ் மொழியில் 12,714; இரஷ்ய மொழியில் 21,688; சீன மொழியில் 40,046 பக்கங்கள் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அண்ணாவின் திறமை மிக்க ஆட்சி

அமைச்சரவையின் அருஞ்செயல்கள்

மக்களவைத் தலைவர் சஞ்சீவியார் புகழ்மாலை

அறிஞர் அண்ணா அவர்களின் திறமைமிக்க தலைமையில் இயங்கும் தமிழக ஆட்சித் திறனை நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் வாயாரப் புகழ்ந்தார்.

சனவரி 6-ஆம் நாளன்று அனந்தப்பூர் நகராட்சி அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட திரு. சஞ்சீவ ரெட்டி, தி.மு.க. அமைச்சரவையின் பல்வேறு பயனுள்ள திட்டங்களையும், செயல்முறைகளையும் வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்.

"ரூபாய்க்குப் படி அரிசி தரும் தமிழக அரசின் திட்டம் பாராட்டத்தகுந்த பெருஞ்செயல்" என்று அவர் கூறினர்.

நம் நாடு
இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 1998 மார்கழி 25 (9—1—68) செவ்வாய்

கிளர்ச்சிக்குக் காரணம் காங்கிரசுக் கட்சியே!

நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்ற ஆட்சி மொழித் திருத்த மசோதாவும், அத்துடன் தொடர்புடைய தீர்மானமும், இந்தி பேசாத பகுதி மக்களுக்குக் கேடுபயப்பதாகும். இந்தி பேசாத பகுதி மக்களின் நலனுக்கு நிலையான சட்டப் பரிகாரம் காணப்போவதாக விளம்பரப்படுத்திக்கொண்டே—பெருங்கேடு பயக்கக்கூடிய சட்டத்தை—இந்திரா காந்தியாரைத் தலைமை அமைச்சராகக் கொண்ட இந்திய அரசு நிறைவேற்றிவிட்டது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற ஆட்சி மொழித் திருத்தச் சட்டதைவிட, அதன் தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் மிகுதியான தீமையை இந்தி பேசாத மக்கள் தலையில் சுமத்தியிருக்கிறது. இந்த உண்மையை, நாடாளுமன்றத்தில் உள்துறையமைச்சரே ஒளிவுமறைவு இல்லாமல் ஒப்புக்கொண்டிருக்கினறார்.

நிறைவேற்றப்பட்டிருக்கின்ற தீர்மானத்தின் விளைவாக, இந்தி மொழி மட்டுமே கற்றிருக்கின்றவர்கள் இந்திய அரசாங்க அலுவலகங்களில் பங்கு பெறக்கூடிய தகுதியைப் பெற்றவர்களாகின்றனர். ஆனால், தங்கள் தாய்மொழியில் மட்டுமே பயிற்சி பெற்றிருக்கக்கூடிய இந்தி பேசாத மக்களுக்கு அத்தகைய சலுகை அத்தீர்மானத்தில் இடம் பெற்றிருக்கவில்லை. இந்தி மொழியைப் போலவே அந்நிய மொழியான ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருந்தால்தான், இந்திக்காரர்கள் இந்தியை மட்டுமே படித்துவிட்டு அரசாங்கத்தில் பெறக்கூடிய சலுகையை இந்தி பேசாதவர்களால் பெறமுடியும்.

இதுவுமன்றி, இந்தி பேசாத மக்கள் ஆங்கில மொழி பயின்று இந்திய அரசாங்கத்தில் பணிபுரிகின்ற வாய்ப்பைப் பெற்றபோதிலும், குறுகிய காலத்துக்குள்ளாக இந்தி மொழி அறிவைப் பெற்ருக வேண்டும் என்பது கட்டாயம்; ஆனல் இந்தி மொழியை மட்டுமே பயின்றுள்ளவர்கள் அரசாங்கப் பதவியைப் பெற முடியும் என்பதுடன், அவர்கள் ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும என்ற கட்டாயமில்லை. இதுபற்றி, உள்துறை அமைச்சர் சாவனிடம் விளக்கம் கோரப்பட்டது; அதற்கு அவர், 'அரசாங்கப் பதவியில் அமரக்கூடிய இந்தி மொழியினரும் ஆங்கில அறிவு பெற்றிருக்க வெண்டும் எனக் கோரப்படுவர்' என்று விளக்கம் தந்துள்ளார். இதை, உள்துறை அமைச்சர் நல்லெண்ணத்துடன் கூறியிருக்கலாம்.

ஆனல், உள்துறை அமைச்சரின் இக்கோரிக்கையை இந்திக்காரர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பதுதான் கேள்வி. 'இந்தி மொழி ஒன்று மட்டுந்தான் ஆட்சி மொழி' என்ற ஏற்பாடு அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுவிட்ட பின்னர், 'அரசாங்கத்திலுள்ள இந்தி மொழியினர் ஆங்கில அறிவினைப் பெற வேண்டும்' என்ற உள்துறை அமைச்சரின் கோரிக்கையை, இந்திக்காரர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என எப்படி நம்புவது?

'அரசியல் சட்ட விதிக்கு மாருக இந்தி பேசாத பகுதி மக்களுக்கு வாக்குறுதி கொடுக்கக் காலஞ்சென்ற தலைமையமைச்சர் பண்டித நேருவுக்கு ஏது உரிமை' எனக் கேட்ட இந்திக்காரர்கள், இந்தி மொழியைக் கற்று அரசாங்கப் பதவிகளைப் பெற்றுள்ள தங்களை ஆங்கில அறிவைப் பெற்றுக்கொள்ளும்படிக் கோருவதற்கோ கட்டாயப்படுத்துவதற்கோ, இந்த உள்துறை அமைச்சருக்கு உரிமை ஏது எனக் கேட்கமாட்டார்களா?

சட்டமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்ற ஆட்சி மொழித் திருத்த மசோதாவும் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற தீர்மானமும், இந்தி வெறியர்களுக்கு நன்மையையும், இந்தி பேசாதவர்களுக்குத் தீமையையும் பயப்பதேயாகும் என்பது வெளிப்படை. இதை உள்துறை அமைச்சரே ஒப்புககொண்டும் உள்ளார்.

நிறைவேற்றப்பட்டிருக்கின்ற சட்டம்—தீர்மானம் ஆகிய இரண்டின் விளைவு, தங்களுக்கு மிகுதியான இலாபம் தருவதாக இருக்கின்றன என்ற உண்மை, இந்திக்காரர்களுக்குத் தெள்ளத் தெளியத் தெரியும்; இருந்தாலும், இந்தி மாநிலங்களில், மேற்படி சட்டத்தையும தீர்மானத்தையும் எதிர்த்து வன்முறைக் கிளர்ச்சிகள் நடைபெற்றவண்ணம் உள்ளன.

நிறைவேற்றப்பட்டிருக்கின்ற சட்டத்தினலும்—தீர்மானத்தினலும் எவருக்குப் பயங்கரமான கேடு விளைந்திடக்கூடுமோ அவர்கள், அவ்விரண்டுக்கும் எதிராகக் கிளர்ச்சி செய்வதுதான் எதிர்பார்க்கக்கூடியதாகும்; அதுதான் நியாயமான கிளர்ச்சியாகவும் இருந்திட முடியும்.

சட்டத்தினலும்—தீர்மானத்தினலும் துன்பத்தை அடைய இருக்கின்ற இந்தி பேசாதவர்கள், அவ்விரண்டையும் எதிர்த்துத் தீவிரமாகக் கிளர்ச்சியில் ஈடுபடாமல் இருக்கின்றபொழுது, அவ்விரண்டினலும், பாடுபடாது முதல்தரமான பயனை அடைந்திடக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கின்ற இந்திக்காரர்கள், அவ்விரண்டையும் எதிர்த்து வன்முறைச் செயல்களை நாள் தவருமல் செய்துகொண்டிருப்பது விந்தையிலும் விந்தையாகும்.

ஆங்கில மொழி பயின்றுள்ள இந்தி பேசாத மக்கள், இந்திக்காரர்களைவிட மிக மிகக் குறைந்த அளவில் இந்திய அரசாங்கப் பணிகளைப் பெறுவதைக்கூட இந்திக்காரர்கள் விரும்பவில்லை; வன்முறைக் கிளர்ச்சி மூலம் தங்களுடைய விருப்பமின்மையையும், எரிச்சலையும் வெளிப்படுத்திவருகின்றனர்.

இந்திக்காரர்களுக்குள்ள இந்த வயிற்றெரிச்சலும், பேராசையும், பொதுவாக இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த அனைவருக்கும் குறிப்பாக மாணவர்களுக்கும், மேற்படி சட்டத்தையும்—தீர்மானத்தையும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்யத் தூண்டுதலாக அமைந்திடும்பட்சத்தில் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்பொழுது தமிழகம் நீங்கலாக ஆந்திரத்திலும், கருநாடகத்திலும் மேற்படி சட்டத்தையும்—தீர்மானத்தையும் எதிர்த்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர் மாணவர்கள்! இந்தியை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆந்திரத்திலும், கருநாடகத்திலும் அரசுக் கட்டிலில் அமர்ந்திருப்பதே அக்கிளர்ச்சிகளுக்குக் காரணமாகும்.

எனவே, இக்கிளர்ச்சிகள் அனைத்துக்கும் இந்திவெறியர்களின் போக்கும், அவர்களுக்கு வளைந்து கொடுத்து—அவர்களுடைய இந்தி மொழி ஆதிக்கத்துக்குச் சட்டப்படி வழிவகுத்துக் கொடுத்திருக்கின்ற காங்கிரசுக் கட்சியுமே மூலகாரணங்களாகும்.

—கா. க.

'நிலைமையுணர்ந்து மேலிடம் திருந்த வேண்டும்'

'இல்லையேல் மொழியின் பேரால் நாடு துண்டாகும்'

'தமிழ் சாகா மொழி என்பதால் வேறு எதையும் ஏற்கமாட்டோம்'

பூம்புகாரில் கி. மனோகரன் முழக்கம்

சென்னை, சன. 7—

"மதத்தின் பேரால் நாடு துண்டாக்கப்பட்டதைப் போல், மொழியின் பேரால் நாடு துண்டாகிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மத்திய அரசின் கடமையாகும்.

"தமிழுக்கு ஏற்பட்ட நெருக்கடி இன்னும் நீங்கவில்லை. தமிழ் மக்களின் மொழியுணர்ச்சியைக் கண்ட பிறகாவது, தமிழுக்கு நெருக்கடி ஏற்படுவதை நிறுத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதையும் மீறி எந்த நெருக்கடி வந்தாலும் அதைத் தமிழர்கள் தூள் தூளாக்க முடியும்!

"தமிழ் சாகா வரம் பெற்றது; இது என்றும் அழியாதது; 'சாகா வரம் பெற்றது' என்று சொல்லிவிட்டுத் தமிழை அழிக்கவரும் சக்திகளை ஏற்றுக்கொள்ள முடியாது"

என்று, நாடாளுமன்ற தி. மு. க குழுத் துணைத் தலைவர் கி. மனோகரன், பூம்புகார்ச் சொற்பொழிவுத் தொடரில், 'இலக்கியத்தில் புரட்சி' என்னும் தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் பேசியதாவது:—

"இந்தி மொழிக்காரர்கள், உணர்ச்சிவயப்பட்டிருக்கிருர்கள். வெறும் உணர்ச்சி மட்டும் பயன்தராது; அவர்கள் அறிவாளிகளாக மாறவேண்டும்!

இந்தியில் படிப்பதற்கு அதில் என்ன இருக்கிறது? இந்தியைப் படிக்கவேண்டும் என்று அச்சமூட்டுவதால் எவ்விதப் பயனும் ஏற்படப் போவதில்லை!

எனவே, மேலிடத்தில் உள்ளவர்கள் திருந்திவிட வேண்டும்; அவர்கள் திருந்தும் வரை நாம் பொறுத்திருக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் தமிழ் அரசு ஏற்பட்டுவிட்டது! மகத்தான முறையில் மக்கள் ஆதரவுடன் வெற்றி நடை போடுகிறது!

இருந்தும், அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதுபோல், நீங்கள் பெற்றிருக்கின்ற உணர்வை வரிசைப்படுத்திக கொள்ள வேண்டும்; இதைத்தான் அண்ணா அவர்கள் விரும்புகிருர்கள்.

தமிழ் அழியாதது; தமிழை அழிக்க எண்ணியவர்கள் அழிந்துபோனர்கள்! 'அழியாதது' என்பதனலேயே அழிவுச் சக்திகளை நாம் விடக்கூடாது!

'நாம் யார்' என்று புரிந்தாயிற்று! நம் பாரம்பரியத்தைப் பற்றித் தெரிந்தாயிற்று! இனி நாம் என்ன செய்யவேண்டும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்!

இலங்கையில் திருச்செல்வம் அமைச்சராக இருக்கிருர்; இன்று அவர் இங்கு வீற்றிருக்கிருர்; இதுபோல், உலகத்திலுள்ள எல்லாத் தமிழர்களையும் உருவாக்கும் சிற்பியாகத்தான் அண்ணா அவாகள் இருக்கிருர்கள்!

"வேண்டாத—விரும்பாத ஒன்றை எங்களிடம் திணிக்காதீர்கள்" என்று மேலே இருப்பவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்; 'திருந்துவார்கள்' என்றும் நம்புகிறேன்.

எப்படித் திருந்துவார்கள் என்று நீங்கள் கேட்கக்கூடும்; நியாயமான கேள்விதான்; மனித மனம் மாறக்கூடியது; அத்தோடு உணர்ச்சி வசப்பட்ட அவர்கள் மாறிவிடுவார்கள் என்று நம்புகிறேன்; அதுவரை அவர்கள் நம்முடன் மோதாமல் இருந்தால் போதும்!

புலவர்கள் எழுதவேண்டிய இலக்கியங்கள், தமிழுக்கு—தமிழ்ப் பாரம்பரியத்திற்கு—தமிழ் மரபுக்கு—பண்புக்கு—உண்மைக்கு ஏற்றதாக இருக்கவேண்டுமென விரும்புகிறேன்."

நெய்வேலி தொழிலாளர்களுக்கு நெருக்கடி

தவிர்க்க நெல்லிக்குப்ப[...] கிருஷ்ணமூர்த்தி உறுதி

கடலூர், சன. 8—

"நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில், ஆட்குறைப்பு நேராதபடி முயற்சி எடுத்து வருகிறது"

என்று, கடலூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. வெ[...] கிருஷ்ணமூர்த்தி, செய்தியாள[...]ரிடம் கூறினர்.

'நெய்வேலி லிக்னைட் கார்ப்[...]ரேஷனில் ஆட்குறைப்பு செய்ய[...]யடும்' என்று ஓர் ஆங்கில நாளி[...]ழில் செய்தி வந்திருப்பதைச் சு[...]டிக்காட்டி கேட்டபோது அ[...] மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நெய்வேலி நிலக்கரி கார்[...]ரேஷனில் ஆட்குறைப்பு செய்ய[...] கூடாது என்று, மத்திய உ[...]நக்குத் துறை அமைச்சர் டாக்டர் ஈ. எ[...] சென்னா ரெட்டிக்குத் தெரிவித்து[...]ளேன்" என்றும் அவர் கூறின[...]

"நெய்வேலி நிலக்கரி கார்[...]ரேஷனில் உள்ள தொழிற் சங்[...]கள் எழுப்பியுள்ள கோரிக்கைக[...] — ஒப்புக்கொண்டபடி — [...]ரணைக்கு எடுத்துக்கொள்ளவில்[...] இதனல், தொழிற் சங்கங்க[...]டையே அமைதியின்மையும் குழப்[...]பமும் நிலவிக்கொண்டிருக்கிறது; இந்த நிலையில் ஆட்குறைப்பு என்றல், அதன் விளைவு, தொழிலாளர்களிடையே கொந்தளிப்பை உண்டாக்கும் என்பதையும் மத்திய அரசுக்குத்' தெரிவித்துள்ளேன்; 'இந்த விவகாரம் [...]ரிசீலனை செய்யப்பட்டுவருகிறது' என்று மத்திய உருக்குத் துறை அமைச்சகத்திலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது' என்றும் அவர் கூறினர்.

"நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷனில் ஆட்குறைப்பு நேரிடாதபடி தகுந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது; எந்த தொழிலாளருக்கும் வேலையில்லா நிலைமை ஏற்படாது" என்றும் திரு. கிருஷ்ணமூர்த்தி நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழ் மொழிக்கு அடுத்த இடமே வட மொழிக்கு!

ஆராய்ச்சியாளருக்குப் புத்தார்வமூட்டும் தி.மு.க. ஆட்சி

தமிழகத் தலைநகரில் நடைபெற்றுவரும் உலகத் தமிழ் மாநாடு குறித்து, கருநாடகத்திலிருந்து வெளிவரும் 'டெக்கான் ஹெரால்டு' ஆங்கில நாளிதழ் (பெங்களுர்) எழுதியுள்ள கருத்துரை வருமாறு:—

"எந்த ஒரு மொழியை ஏற்பது என்று நாடு முழுவதிலும் தீவிரமான விவாதம் நடந்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில், மிகத் தொன்மை வாய்ந்ததும, இன்றளவும் அழிவுருமல் வாழ்ந்துவருவதுமான தமிழ் மொழி, பல உலக நாடுகளிடையே எவ்விதம் நல்லெண்ணத்தை வளர்த்து வந்துள்ளது என்பதை விளக்குவதுபோல், தமிழகத்தில்——அமைதியான சூழ்நிலையில்—உலகத் தமிழ் மாநாடு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

"உலகெங்கிலுமுள்ள பல்கலைக் கழகங்களில் இடம் பெற்றுள்ள—காலத்தால் மறையாத—தொன்மை மிக்க மொழிகளில் இந்திய மொழிகளுள் தமிழுக்கே சிறப்பான இடம் கிடைத்துள்ளது!

"சமஸ்கிருத மொழிக்கும் இதே போன்ற இடம் கிடைத்திருப்பினும், பயன் கருதிப் பார்க்கும் பொழுது, தமிழுக்கு அடுத்தபடியான இடமே அதற்குக் கிடைக்கும். வேதங்களை ஆராய்ச்சி செய்ய விரும்பும் சுற்றறிவாளர்களுக்கு மட்டுமே சமஸ்கிருதம் பயன்பட முடியும்.

"பேராசிரியர் தனிநாயகம் அவர்கள் நமது செய்தியாளரிடையே தெரிவித்தபடி, தமிழ் மண்ணிலேயே பிறந்து-வளர்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் இன்று ஆட்சி புரிந்துவருகிறது என்கிற செய்தி இன்றைய இந்தியாவை ஆராய்ச்சி செய்ய விரும்பும் நல்லறிஞர்களிடையே புத்தார்வத்தைத் தோற்றுவித்துள்ளது."

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாது! தமிழை—தமிழர்களைத் தாழ்த்த யாரும் எண்ணமுடியாது! அந்த எண்ணத்தை முறியடிப்போம்!

தமிழர்கள் பல்வேறு கட்சிகளில்—பல்வேறு துறைகளில் இருக்கலாம்; ஆனல், 'தமிழர்கள்' என்ற முறையில் நாம் ஒன்று சேரவேண்டும்."

பண்டைத் தமிழர் நெறியை ஒத்ததே இன்றைய சீக்கிய சமயம்!

குரு கோவிந்த சிங் பிறந்தநாள் விழாவில் அறிஞர் அண்ணா உரை

சென்னை, சன. 9—

" 'ஒன்றே குலம் - ஒருவனே தேவன்' என்பதே பண்டைத் தமிழ் மக்களின் சமய நெறியாக இருந்தது; சாத்திரச் சடங்குகள் அங்கிருக்கவில்லை; மூடப் பழக்க வழக்கங்கள் இருந்ததில்லை: சீக்கியர் நெறியைப் போலவே, தமிழர் நெறியிலும் விக்கிரகங்களுக்கு இடமில்லாதிருந்தது; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நீங்கள் இங்கே வந்ததாகக் கற்பனை செய்துபார்த்தால் இங்கே இருந்த சமயமும் உங்கள் சமயமும் ஒன்றாகவே இருப்பதை அன்று நீங்களே கண்டிருப்பீர்கள்.

" கடவுள் பக்தி இல்லாத என்னை இங்கு அனுமதித்தது பற்றி இங்கு நானே எவரேனும் கேட்கக்கூடும். மனிதன் மற்றெல்லாவற்றுக்கும் முதன்மையானவனாகவும், கடவுளைத் தவிர வேறு எவருக்கும் மனிதன் அடிமையாகிடத் தேவையில்லையென்றும் சமயம் கூறுமானால், நான் நூற்றுக்கு நூறு சமயவாதியே! இதைவிட்டு, தனி மனிதருக்குள் கீழ்சாதி—மேல்சாதி என்று ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிக்கக்கூடியதாக சமயம் இருக்குமானால், அது நடவாது!

" 'மனிதனைப் பாகுபாடு செய்திடுவதே கடவுள் நெறி' என்று எவரேனும் சொல்லுவார்களானால், 'நான் நாத்திகனே' என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமய நெறி என்பது புனிதமானது—உண்மையானது—மனிதாபிமானமுள்ளது! அடக்க உணர்வைச் சோதிப்பது என்றால், என்னை, 'சமயத்துக்கு அப்பாற்பட்டவன்' என்று எவரும் சொல்லிவிட இயலாது. என்னை, 'நாத்திகன்' என்று கூறுவாருக்கு நான் கூற விரும்புவது இதுதான்"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், குரு கோவிந்த சிங் பிறந்தநாள் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்கள். இவ்விழா, சென்னை குரு நானக் சத் சங்கச் சார்பில் சன. 7-ம் நாள் நடைபெற்றது,

அறிஞர் அண்ணா அவர்கள், இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்தபோது, உருவிய வாளுடன் சீக்கிய இளைஞர்கள் நூறு பேர் அணிவகுத்து நின்று மரியாதை செய்து வரவேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் முரசொலி மாறன் எம்.ஏ., எம்.பி. அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார்.

குரு நானக் சத் சங்கத்தின் துணைத் தலைவர் எம். எஸ். பெடி அனைவரையும் வரவேற்றார்.

பொதுச்செயலாளர் மனோகர் சிங் நன்றி கூறினார்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் விளக்கியதாவது :—

" பணி தனக்கென மட்டுமல்லாமல், சமூகம் முழுமையும்—அதன் மூலம் நாடு முழுமையும் பயனடைய வேண்டும் என்ற மனோ நிலையுடனே சீக்கியர்கள் பணியாற்றுகின்றனர்; தமிழர்களாகிய நாங்களும், அத்தகைய உயர்ந்த கோட்பாடுகள் உடையவர்களாயிருந்தோம்! சமுதாயத் தொண்டே தமிழர் பண்பாட்டின் மையமாக விளங்கிற்று! இதனால்தான், தமிழகம், சீக்கியர்களை அணைத்துச் செல்கின்றது!

இங்கே பேசிய சீக்கியப் பிரமுகர், 'எங்கள் குழந்தைகளெல்லாம் இங்கேதான் பிறந்தன' என்றார்; ஒன்றைச் சொல்கிறேன் — உங்கள் குழந்தைகள் மட்டுமல்ல; உங்கள் பேரன்களும், கொள்ளுப் பேரன்களும் இங்கேயே பிறக்கட்டும்; அக்குழந்தைகளெல்லாம் சுவாசிக்கின்ற முதல் காற்று தமிழ் மணம் கமழும் காற்றாக இருக்கட்டும்; தமிழ் மண்ணில் அவர்கள் தவழட்டும்; நிரந்தரமாக நீங்கள் இங்கேயே இருக்கலாம்; வேறு சில சமூகத்தாரைப் போலக் கவலைகொள்ளத் தேவையில்லை.

சீக்கிய நெறி, சுரண்டலை அனுமதிப்பதில்லை; பிறர் உழைப்பின் பலனைக் கொண்டு வாழுவதை அனுமதிப்பதில்லை; எனவே, சீக்கிய நண்பர்களின் உறவு தமிழ் மக்களுக்கு மதிப்பளிக்கும் ஓர் உறவாகும்; என்றேனும் ஒரு நாள், தமிழ் - சீக்கியப் பண்பாடுகள் இணைந்தியங்கிட வகை காண்போம்.

சீக்கிய மக்களது வீரம் போற்றற்குரியது; நாட்டின் எல்லையிலே அவர்கள் வீரத்தோடு எதிர்த்து நின்றிராவிட்டால் என்ன நிகழ்ந்திருக்கும் என்பதை எண்ணவே இயலவில்லை!

சீக்கியரது வரலாறு புகழுடையதாக இருந்திருப்பின் அவர்களது வருங்காலமும் மேலும் சிறந்த புகழுடன் இருக்கும்.

தமிழக அரசு உங்களுக்கு ஏதேனும் உதவியாக இருக்க முடியுமென்றால் அதைச் செய்திட நான் தயங்கமாட்டேன்; சீக்கிய சமயத்தின்மீது எனக்குள்ள உயர் மதிப்பே இதற்குக் காரணம்.

அமிர்தசரஸ் கோயிலின் மாடங்களிலே உள்ள ஓவியங்களைப் பார்த்திருக்கிறேன்; சீக்கிய சமூகமானது எத்தனைத் துன்பங்களைத் தாங்கி இன்னல்களைக் கடந்து வந்துள்ளது என்பவற்றையெல்லாம் அந்த ஓவியங்கள் சித்தரிக்கின்றன.

அயரா உழைப்பின் மூலம் அவர்கள் இன்றைய மேம்பாடான நிலையை அடைந்தார்கள். தற்காலத் தமிழ் மக்களும் சீக்கியரைப் போன்ற நலல பண்புகளைப் பெறவேண்டுமென நான் விழைகிறேன்.

தமிழக அரசு கொண்டுள்ள மொழிக் கொள்கையை சென்னைவாழ் சீக்கியர் ஆதரிப்பதாக உங்கள் சங்கத் துணைத் தலைவர் குறிப்பிட்டார்; அது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாட்டில், பொதுவாகவே ஒரு தப்பெண்ணம் நிலவுகிறது; வடக்கேயிருந்து வருகிறவர்கள் எல்லாம், இந்தி தனியொரு ஆட்சிமொழியாவதை ஆதரிப்பவர்கள் என்ற எண்ணமே!

அது சரியல்ல; சீக்கிய மக்கள் தங்களது குர்முகி மொழியை எந்த அளவு விரும்புகிறார்கள் என்பதையும் அறிவேன்; அதேபோல, அசாம் மொழி எப்படி அசாமியர்களால் மதிக்கப்படுகிறதென்பதையும் அறிவேன்.'

'சோவியத் நாட்டின் சார்பில் வாழ்த்துகிறேன்'

பூம்புகாரில் செம்பியன் பேச்சு

பூம்புகாரில் சோவியத் நாட்டுத் தமிழறிஞர் செம்பியன் பேசியதாவது:—

"சோவியத்து நாட்டிலேயிருந்து நான் ஒருவன் மட்டும் இந்த விழாவிற்கு வரவில்லை; என்னுடன் நான்கு பேர்கள் வந்திருக்கிறார்கள்; நாங்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதை எண்ணி மகிழ்கிறோம்; அவர்கள் சார்பிலும் உங்களுக்கு நன்றியையும் வாழ்த்தையும் கூறிக்கொள்கிறேன்.

சோவியத் நாட்டு மக்களின் நல்வாழ்த்துக்களை அன்பை இப்போது இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழர்களின் தலைநகராகத் திகழும் சென்னையில் இந்த விழா நடப்பதையெண்ணி அளவிலா மகிழ்ச்சியடைகிறோம்.

திருவள்ளுவர் போன்ற மேதைகள் தோன்றிய இந்த நாட்டில், 'சங்கம்' என்பது ஒரு சார்பாக இல்லாது பெருந்தொண்டாற்றி வருவது மகிழ்ச்சியானது.

இந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு வெற்றி பெற வாழ்த்துகிறோம். சோவியத் நாட்டின் சார்பாக மீண்டும் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

வாழ்க—இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு!

'வாழ்க தமிழ்—வாழ்க அதற்குத் துணையாக இருப்பவர்கள்!"

பூம்புகார் கவியரங்கில் அமைச்சர் நெடுஞ்செழியன் 'ஏக்கம்'!

பூம்புகாரில் 7—1—68 அன்று நடந்த கவியரங்கத்தில் பங்கேற்றுப் பாடிய கவிஞர்கட்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துப் பேசிய அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"கவியரங்கில் கலந்துகொண்ட அனைவரும் கவிதை யாத்துப் பாடினர்; ஆனால், நான் பாடவரவில்லை. கலைஞர்—இல்லை, இல்லை—கவிஞர் கருணாநிதியின் தலைமையில் பாடிய கவிஞர்கள், விடுதலை வீரர்கள் பற்றிப் பாடியதையும், அறிஞர் அண்ணா அவர்களின் சிறப்பியல்புகளைப் பற்றி எட்டுக் கவிஞர்கள் எட்டுக் கோணத்திலிருந்து பாடியதையும் கேட்டோம்; சொற்சுவையும் பல்பொருள் தரும் கருத்துச் சுவையும் கலந்து பாடினார்கள்; 'கவியரங்கம் இதோடு முடிந்துவிட்டதே-இனியும் தொடராதா' என்று ஏங்கும்படி இருந்தது!

"கவிஞர் கருணாநிதியும் அவ்வப்போது வந்து தமது கவித்திறமையை நிலைநாட்டினார்; அவருக்குத் தனியே வாய்ப்புத் தந்திருந்தால் அனைவரையும் மிஞ்சும் வகையில் கவி பாடியிருப்பார்.

அன்றைய நாள் மன்னர்கள், கவிஞர்களின் நற்கவிதைகளுக்குக் கழஞ்சுப் பொன் பரிசளிப்பார்கள்; நான் அன்றைய நாளில் இருந்த நெடுஞ்செழிய மன்னராயிருந்திருந்தால், இங்கு பாடிய கவிஞர் ஒவ்வொருவருக்கும் 16 ஆயிரம் கழிஞ்சுப் பொன் தந்திருப்பேன்; கவியரங்கத் தலைவர் கருணாநிதிக்கு 32 ஆயிரம் கழிஞ்சுப் பொன் தந்திருப்பேன்; ஆனால், அத்தகைய அரசனாக — செல்வம் உள்ளவனாக நான் இல்லை; மனமும்—நன்றியுணர்ச்சியும் இருக்கிற காரணத்தால் பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கிறேன்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை—செய்நன்றி கொன்ற மகற்கு' என்பது வள்ளுவர் வாக்கு; இன்று தம் கவித் திறனால், தமிழ் உணர்வை — தமிழின்பத்தைத் தந்த கவிஞர்களுக்கு நிச்சயம் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்."

இலக்கியத்திலே புரட்சி விளைவித்தவர் அண்ணா!

அன்று எதிர்த்தவர்களும் இன்று வாழ்த்துகிறார்கள்!

பூம்புகாரில் என். வி. நடராசன் விளக்கவுரை

சென்னை, சன. 7—

'மாளிகையிலே சிக்கிக்கிடந்த குறளை—மறைக்கப்பட்டிருந்த குறளை மண்குடிசைக்குக் கொண்டுவந்தவர்கள் பெரியாரும், அறிஞர் அண்ணாவும்தான் என்பதை நடுநிலையோடு கூறுகிறேன், கட்சிக் கண்ணோட்டத்தில் இதனை நான் கூறவில்லை.

"அதேபோல், தமிழ் இலக்கியத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர்—புரட்சியை உண்டாக்கியவர் அறிஞர் அண்ணா அவர்கள்தான் ஆவார்கள்"

என்று கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல் சி. அவர்கள், பூம்புகாரில், 'இலக்கியத்தில் புரட்சி' என்ற தலைப்பில் நடந்த உரைக்கோவை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது :-

"முன்பு இலக்கியங்கள், மாடமாளிகைக்குச் சொந்தமாக அடைபட்டுக்கிடந்தன; எல்லோருக்கும் பயன்படவில்லை.

திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதியிருக்கும் உரையையும், புலவர் குழந்தை எழுதியிருக்கும் உரையையும் படித்துப் பார்த்தால் எப்படிப்பட்ட மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரியும்.

இராமாயணம் தெய்வ நூலாகக் கூறப்பட்டது; அண்ணா அவர்களோ, 'அதிலுள்ள கற்பனைகளைத்தான் பாராட்டலாம்; அதைத் தெய்வ நூல் என்று கூற முடியாது' என்றார்; ஆனால் புலவர்கள் அப்போது ஏற்றுக்கொள்ளவில்லை; இப்போது, 'அண்ணாவே வழிகாட்டி' என்கிறார்கள்; காரணம், புலவர்களையும் தம் வழிக்குக் கொண்டுவரும் ஆற்றல் அண்ணாவிடம் உண்டு.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் நம்மை அழிக்கவந்த இந்தியை எதிர்த்தோம்! அன்று விரல் விடும் அளவுக்குத்தான் எதிர்ப்பாளர்கள் இருந்தார்கள்!

தமிழ் நாட்டில் நடக்கும் புரட்சி வேறு எந்நாட்டிலும் நடக்காது! எந்த இராஜாஜி இந்தியைப் புகுத்தினாரோ அதே இராஜாஜி இன்று இந்தியை ஒழிக்கத் தம வாழ்க்கையையே அர்ப்பணிக்கிறேன் என்கிறார்! இது எவ்வளவு புரட்சி!

நாடகத் துறையில் அன்று 'நல்ல தங்காள்' கதையும், ஐவருக்கும் அழியாப் பத்தினி கதையான பாண்டவர்கள் கதையையும் தான் பார்க்க முடிந்தது! இப்படிப்பட்ட நாடகத் துறையைத் தான் அண்ணா அவர்கள் மாற்றினார்கள்! அண்ணா அவர்கள், சமுதாயத்திற்கு ஏற்ற நாடகங்களை உருவாக்கக் காரணமாக இருந்தார்கள்!

அண்ணாவின் இலக்கியப் பணி சொல்லமுடியா அளவு விரிந்து கிடக்கிறது! பெரிய புரட்சிகளை இலக்கியத் துறையில் உண்டாக்கி, சமுதாய நிலைக்கு ஏற்ற இலக்கியங்களைப் படைத்தார்கள்!

அண்ணா அவர்கள், 'சிறந்த எழுத்தாளர்' என்ற அளவில் மட்டும் இந்தப் புரட்சிகளைச் செய்யாமல், 'மனித சமுதாயம் நல்ல நிலையடைய வேண்டும்' என்ற இலட்சியத்திலும் அவைகளைச் செய்தார்!

இப்படிப்பட்ட பணிகளைக் கண்டபின், அவர் இயக்கத்தில் இருக்கின்ற நானும் என் போன்றவர்களும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேது?

'அண்ணாவின் இலக்கியச் சாதனை தான் எதிர்காலச் சமுதாயப்' என்பதை உணரவேண்டும்.

இசைவாணர்களெல்லாம் இப்படிப்பட்ட விழாக்களில், 'தமிழ்தான் பாடுவோம்' என்று எண்ணிப் பார்த்திருப்பார்களா?

இன்று பாடுகிறார்கள் 'பாடித்தான் ஆகவேண்டும்' என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது!

தமிழை யாரும் தாழ்த்த முடி

(2-ம் பக்கம் பார்க்க)

திருவொற்றியூர் சம்பவம்

மாவட்டக் கலெக்டர் விளக்கம்

சென்னை, ஜன. 8—

" திருவொற்றியூர் 'விம்கோ' தொழிற்சாலையின் முன் கூடி வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு அத்தொழிற்சாலை அதிகாரிகளது கார்களைக் கற்கள் எறிந்து தாக்கிச் சேதப்படுத்தி, அதிகாரிகள் ஐவரைக் காயமுறச்செய்த அத்தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மீது போலீசார் தடியடிப்பிரயோகம் செய்ய நேர்ந்தது ; அதையும் மீறிக்கொண்டு தொழிலாளர்கள் அதிகாரிகளின் கார்களை நோக்கிக் கற்களை வீசியபடி முன்னேறிவந்தனர் ; 'தொழிற்சாலை அதிகாரிகளின் உயிர்களுக்கே ஆபத்து வருமோ' என்ற பயங்கர நிலைமை உருவாயிற்று ; அவ்வாறு ஏதும் நிகழாமலிருக்கப் போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய நேர்ந்தது "

என்று மாவட்ட ஆட்சித் தலைவர் இலட்சுமிகாந்தன் பாரதி, செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியதிலிருந்து தெரியவந்தது. அவர் தெரிவித்த விவரங்கள் வருமாறு :—

தொழிற்சாலை நிர்வாகத்தைச் சேர்ந்த தனிப்பட்ட அதிகாரிகள் நிர்வாகக் காரியங்களுக்காகத் தொழிற்சாலையினுள் சென்று வர உரிமை பெற்றவர்கள்.

தொழிலாளர்கள், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்திடலாம் ; ஆனாலும், அதிகாரிகளை மறிப்பதும் தடுப்பதும் கூடாதென்பதைச் சம்பந்தப்பட்ட தொழிலாளர் தலைவர்களிடம் அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

இதல்லாமல், தமிழக முதலமைச்சர் இல்லத்தில் இந்தக் குறிப்பிட்ட தொழில் தகராறு குறித்து கடந்த 30-ம் தேதி நடந்த பேச்சு வார்த்தைகளின்போதும், இந்தச் சட்ட நிலைமை தொழிலாளர் பிரதிநிதிகளாக வந்தவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டு—அவர்களும் அதை ஏற்றுக்கொண்டனர்.

அவர்கள் ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக மறுநாள் இரண்டு லாரிகள், அத்தொழிற்சாலையிலிருந்து வெளியே போக அனுமதிக்கப்பட்டது.

இன்று அத்தொழிற்சாலையின் நிர்வாகிகள் 14-பேர் நான்கு கார்களில் தொழிற்சாலைக்குச் சென்றனர் ; செல்லுமுன், அரசாங்க அதிகாரிகளுக்குத் தங்கள் உத்தேசத்தைத் தெரிவித்தனர்.

அதிகாரிகள்—குறிப்பாக செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத் தலைவர் குசேலர் (இடதுசாரி கம்யூனிஸ்டு) என்பவருடன் தொடர்பு கொண்டு நிலைமையை மீண்டும் விளக்கி, அமைதிக்கு பங்கம்நேராதிருக்க வேண்டுமென்பதையும், தொழிலாளர் அமைதியான ஆர்ப்பாட்டத்தில் மட்டுமே ஈடுபட முடியும் என்பதையும் எடுத்துரைத்தார் ; குசேலர் அதற்குச் சம்மதித்தார் ; ஆனால் தொழிலாளர்கள், அதற்கு மாறாக நடந்துகொண்டனர்.

14 நிர்வாகிகளை ஏற்றிக்கொண்டு 4 கார்கள் அந்த இடத்தை அடைந்ததும், தொழிலாளர்கள் அந்தக் கார்களை மறித்து அவற்றின் முன்னால் போய் படுத்தனர்.

போலீசார், சட்ட நிலைமையை அப்போதும் விளக்கினர்—வேண்டினர் ; அவர்களது விளக்கமும் வேண்டுகோளும் பலனளிக்காமற் போகவே, தொழிலாளரைப் போலீசார் ஒவ்வொருவராகத் தூக்கி அப்புறப் படுத்தினர்.

இது நடந்தபோது, கூடியிருந்த தொழிலாளர்கள் கல்லெறியத் தொடங்கினர் ; கல்லெறி மிகப் பெரிய அளவில் நடந்தது. கார்கள் சேதமுற்றன ; அவற்றில் இரண்டு மோசான அளவில் சேதமுற்றன. அவற்றில் இருந்த அதிகாரிகளில் 5 பேர் படுகாயமுற்றனர் ; போலீசாரும் காயமடைந்தனர்,

நிலைமை கட்டுக்கடங்காமல் போவதை அறிந்த போலீசு அதிகாரிகள் தடியடிப் பிரயோகம் செய்ய உத்தரவிட்டனர்; தொழிலாளர் தரப்பில் 15 பேர் காயமடைந்தனர். அதை அடுத்துக் கல்லெறி உச்சநிலையடைந்தது ; போலீசார் தரப்பில் 3 அதிகாரிகள் உட்பட 18 பேர் காயமடைந்தனர்.

தொழிலாளர்கள் கல் எறிந்தபடி ஆவேசக் குரலெழுப்பி அந்தக் கார்களை நோக்கி முன்னேறித் தாக்க முற்பட்டனர் ; அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி அஞ்சிய போலீசார், தங்களது உயிர்களைக் காத்துக் கொள்ளத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் ; 8 ரவுண்டுகள் சுட்டனர்; அதில் மூன்று தொழிலாளர் காயமுற்றனர் ; ஸ்டான்லி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவர்களில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவம் 9-30 மணியளவில் நடந்தது ; அது நடந்த அரைமணி நேரத்துக்கெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கு சென்றடைந்தார். மாநில போலீசுத் துறைத் தலைவரும், (ஐ. ஜி.) அங்கு வந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்தது ஏன் என்பது குறித்துக் கேட்டறிந்தார் ; சேதமுற்ற கார்களையும் காயமடைந்தோரையும் பார்த்தார்.

அமைச்சர் விரைந்தார்

ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களை அமைச்சர் சாதிக் பாட்சா சென்று பார்த்து, போதிய மருத்துவ வசதிகளைச் செய்யுமாறு மருத்துவமனையாளர்களை ஊக்குவித்தார்.

அதன்பின், மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் உயர் அதிகாரிகள் பலரும் மருத்துவமனை சென்று காயமுற்றோரைப் பார்த்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை—13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

கல்கத்தாவில் அண்ணா மணிவிழா

வங்கத் தமிழர் சங்கத்தாரின் ஏற்பாடு

கல்கத்தா—அவுராவில் இயங்கி வரும் வங்கத் தமிழர் சங்கக் குழுக் கூட்டம் 31—12—67 அன்று நடைபெற்றது. கடந்த ஆண்டு செயற் குழு நிர்வாகிகளே இந்த ஆண்டிற்கும் நீடிப்பது என ஏகமனதாகக் குழு தீர்மானித்தது.

தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் மணிவிழாவினை கல்கத்தாவில் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடுவது என்றும், இவ்விழாவினையொட்டி 'அண்ணா மணிவிழா மலர்' ஒன்றைச் சிறப்பான முறையில் வெளியிடுவதென்றும், கீழ்க்கண்ட பிரமுகர்களைக் கொண்ட 'அண்ணா மணிவிழா மலர்க் குழு' அமைப்பது என்றும் குழு ஏகமனதாகத் தீர்மானித்தது. இப்பிரமுகர்களின் இசைவு கோரி கடிதம் எழுதச் செயற்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

சங்கத் தலைவர் திரு. டி. என். தங்கதுரை மலர்க் குழுவின் தலைவராகவும், மலர்க் குழு உறுப்பினர்களாக புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., சிவாஜி கணேசன், இராஜா சர் முத்தையா செட்டியார், பொள்ளாச்சி மகாலிங்கம், முரசொலி மாறன் எம்.பி., சீமைச்சாமி எம்.எல்.ஏ., இரா. சனார்த்தனம், மா. செங்குட்டுவன் ('நம் நாடு'), மா. கருப்பையா, டி. வீரையா, நாவலர் ஜே. நீதிவாணன், திருவாரூர் எஸ். இராசகோபால், லாடனேந்தல் பொ. நாராயணன், எம். இராமையா, செ. வீரபத்திரன் ஆகிய பிரமுகர்களைக் கொண்டதாகும்.

'அண்ணா மணி விழா மலரை', தமிழகப் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் வெளியிட — விழாவிற்குத் தலைமைவகிக்க தமிழகச் சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்களையும் அழைத்து அண்ணா மணிவிழா மலர் வெளியீட்டு விழாவினைப் பெருஞ் சிறப்பாகக் கொண்டாடுவது என்றும், இவ்விரு தமிழக அமைச்சர்கட்கும், முரசொலி மாறன் எம்.பி. அவர்கட்கும் சிறப்பான வரவேற்பு அளிப்பது என்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இம்மலர் வெளியீட்டின்மூலம் விளம்பரமாகவும், நன்கொடையாகவும் கிடைக்கும் வருவாயைச் சங்கம் நடத்தும் இலவசத் தமிழ்ப் பள்ளிக் கட்டிட நிதிக்கு ஒதுக்கப்படும்.

வடநாட்டிலேயே வங்கத் தமிழர் சங்கம்தான் இலவசத் தமிழ்ப் பள்ளி நடத்திவருகின்றது.

சங்கம் கல்கத்தாவில் பதிவு செய்யப்பட்ட தொன்றாகையால் பள்ளிக் கட்டிட நிதிக்கு அளிக்கும் பொருளுக்கு வரி விலக்கு உண்டு.

பழமையிலேயே

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தாவது :—

" மகளிர் மாண்பைத் தமிழ் இலக்கியங்களிலும் நடைமுறை நிகழ்ச்சிகளிலும் காணலாம்.

பெண்கள்மிருதுவானவர்கள்தான்; ஆனால் அத்துடன், உறுதியும் மிக்கவர்கள் !"

நீதியை நிலைநாட்ட...!

அடுத்து திருமதி அமுதா ராகவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

" பண்டையச் சிறப்புக்குத் தாய்க்குலம்தான் காரணம்.

தமிழ் இலக்கியங்களான அகம், புறம் ஆகியவைகளில் பெண்களின் மாண்பு சிறப்புற எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

நீதியை நிலைநாட்ட கண்ணகி வழக்குரைத்ததைப்போல தமிழைக் காக்க ஒவ்வொருவரும் கண்ணகிகளாக ஆகவேண்டும்."

உண்மை சோஷலிசம் எங்கே உருவாகிறது ?

திருமதி பொற்செல்வி இளமுருகு பேசுகையில் கூறியதாவது :—

" தமிழ் இல்லையென்றால் நாம் இல்லை என்பது நாம் அறிந்த உண்மை.

எந்தப் பெண் தன்னைக் காத்துக் கொள்ளக் கூடியவளாக விளங்குகிறாளோ அவளே மகளிர் மாண்பைக் காக்கக்கூடியவளாவாள்.

தமிழை, 'தாய்' என்றுதான் கூறுகிறோமே தவிர, 'தந்தை' என்று கூறவில்லை ; இதிலிருந்தே நம் முன்னோர்கள் பேணிய மகளிர் மாண்பு எத்தகையது என்பது விளங்கும்.

உண்மையான சோஷலிசத்தை வளர்ப்பவள் ஏழைப் பெண் தான் ! காட்டிலே அலைந்து கூலி வாங்கிக் கஞ்சி காய்ச்சி தனக்கு இல்லாதுபோனாலும் தன் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் கொடுத்து வாழ்கிறாளே—அங்குதான் சோஷலிசமும், மகளிர் மாண்பும் ஒளி வீசுகிறது."

62-வது பார்க்பேர் பொருட்காட்சி

எஸ். ஐ. ஏ. ஏ. மைதானம் — சென்னை-3

10--1--68 புதன் மாலை 6-30 மணிக்கு

திரு. ஜாவர் சீதாராமன் அளிக்கும்

பிரண்ட்ஸ் ஆர்ட்ஸ் கிளப் அளிக்கும்

'முகூர்த்தம்' நாடகம் நடைபெறும்

கட்டணம் : ரூ. 2, 1, காசு 50

11—1—68 வியாழன் மாலை 6-30 மணிக்கு—இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் நடிக்கும் நாடகம் 'தமிழ் எங்கள் உயிர்'

15—1—68 திங்கள் மாலை 6-30 மணிச்கு—நாட்டியப் பேரொளி பத்மினியின் 'தசாவதாரம்' நாட்டிய நாடகம் நடைபெறும்.

பூம்புகார் நிகழ்ச்சிகள்

10--1--68

காலை 9 மணி : நாயன இசை—மதுரை சேதுராமன்.

9-30 மணி : புல்புல்தராங்—ஐயாவு.

10 மணி : திருவள்ளுவர் இசையரங்கு—திருமதி எஸ். டி. சுப்புலட்சுமி.

11 மணி : பாரதிதாசன் பாடல்—குடந்தை டி. என். சீனிவாசன்.

11-30 மணி முதல் 1 மணி வரை : சொற்பொழிவுத் தொடர் ; பொருள் : 'காலமும் கருத்தும்' தொடக்கவுரை : மா. கி. தசரதன் எம்.ஏ.; தலைமையுரை : ஔவை சு. துரைசாமி பிள்ளை : பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம். எல். சி., அரங்கண்ணல் எம்.எல்.ஏ., டி. வி. நாராணசாமி, ஆலடி அருணா எம்.எல்.ஏ. ந. காமராசு, க. அறிவழகன் எம்.ஏ.,எம்.எல்.சி., அன்புகணபதி, நாவளவன்.

பிற்பகல் 3-30 மணி : சொற்பொழிவுத் தொடர்—'காலமும் கருத்தும்' தொடர்ச்சி—கு. திருமேணி, பாண்டியன், ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. ; சிறப்புரை ; சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார்.

மாலை 4-30 மணி : தமிழிசை-மதுரை சோமு.

இரவு 6-30 மணி முதல் 7-30 ம[ணி] வரை : நூல் வெளியீடு-'புகாரில் ஒரு நாள்'—தலைவர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் ; பரிசுக் கவிதை விளக்கம் மு. ரா. பெருமாள் (முதலி பார்) பரிசளிப்பு : எம். ஜி. இராமசந்திரன் எம்.எல்.ஏ.; நன்[றி] கூறல் : நீலநாராயணன்.

7-30 மணி : விழா நிறைவுச் சொ[ற்]பொழிவு—மாண்புமிகு பே[ரறி]ஞர் அண்ணா.

இரவு 9 மணி : நாடகம்—'இராச ராச சோழன்'—டி. கே. எஸ். சகோதரர்கள்.

கலை நிகழ்ச்சிகள்

தோவானை சாமுவேல் குழுவினரின் ஆதிவாசி நடனம்—மாலை 6-மணி முதல் 6-40 வரை; உதகமண்டலம் முத்திசேன் குழுவினரின் தோடர் நடனம்—மாலை 6-40 மணி முதல் 7-20 வரை ; உதகமண்டலம் எம்.ஏ. கவுந்தன் குழுவினரின் கோத்தர் நடனம்—இரவு 7-மணி முதல் 8-மணி வரை.

பூம்புகாரில்.....

ஐந்தாம் நாள்

சென்னை, சன. 8—

பூம்புகாரில் ஐந்தாம் நாள் காலை நிகழ்ச்சிகள், மதுரை பொன்னுத்தாயின் நாயன இசையுடன் துவங்கியது.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கனக இரத்தினம் இறை வணக்கம் பாடினார்.

பின், 'மகளிர் மாண்பு' என்ற சொற்பொழிவுத் தொடர் திருமதி சவுந்தரா கைலாசம் தலைமையில் நடைபெற்றது ; தலைமையுரையை அவர், கவிதையிலேயே நிகழ்த்தினார்.

திருமதி இராதா தியாகராசன் தொடக்கவுரைக்குப் பின்—செல்வி கஸ்தூரி, செல்வி சற்குணம், திருமதி அமுதா ராகவன், திருமதி பொற்செல்வி இளமுருகு, திருமதி இலட்சுமி சுந்தரபாரதி, திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர் ; இறுதியில், அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் சிறப்புரையாற்றினார்.

பிற்பகல் நிகழ்ச்சி துவங்கியதும், 'தமிழன்' என்ற பொருளில் கவிஞர்கள் ஒவ்வொருவரும் தனித் தனித் தலைப்பில் கவிஞர் வாணிதாசன் தலைமையில் கவி பாடினர் ; இந்நிகழ்ச்சியில் முருகுசுந்தரம், செல்வி ஜுவாலா, தேவதாசன், குடியரசு, புருடோத்தமன், மணிமொழி, புலமைப்பித்தன், புலவர் பாலசுந்தரம், சாரணபாஸ்கரன், புலவர் இளஞ்செழியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதன்பின், சரசுவதி சீனிவாசன் குழுவினரின் அருட்பா நடைபெற்றது.

மாலை நிகழ்ச்சியின் இறுதியாக பட்டி மன்றம் துவங்கியது ; 'சங்க காலத்திற்குப் பின்னர் தமிழ் சிறப்பான வளர்ச்சி பெற்றிருக்கிறது—வளர்ச்சி பெறவில்லை' என்ற தலைப்புகளில் பேராசிரியர் ப. சு. மணியம் தலைமையில் விவாதம் துவங்கியது ; 'வளர்ச்சி பெற்றிருக்கிறது' என்று முகமது முஸ்தபாவும், ப. குணசேகரும் ; 'வளர்ச்சி பெறவில்லை' என்ற தலைப்பில் புலவர் நன்னனும் கோ. இளங்கோவனும் பேசினர்.

மாலை 6 மணிக்கு திருமதி யு.ஆர். ஜீவரத்தினம் குழுவினரின் இசை நிகழ்ச்சியும், ஜெயலலிதா குழுவினரின் 'காவிரி தந்த கலைச் செல்வி' என்ற நாட்டிய நாடகமும் நடைபெற்றது.

பின்னர், அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'ஓர் இரவு' நாடகம்—நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி குழுவினரால் நடிக்கப் பெற்றது.

பொதுக்கூட்டங்கள்

10--1--68

பெரிய கொடிவேரி

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு சவேரியார் கோயில் வீதியில்; தலைவர்: கே. ஏ. பொன்னுசாமி; பேசுவோர்: பி.ஏ. சாமிநாதன் எம்.பி., எஸ். ஜி. கண்ணப்பா, எஸ்.கே. சுப்பிரமணியம், டாக்டர் சிவக்கொழுந்து, இளங்கோவன், கே. ஏ. இராசு, கே.வி. இராமன், கே.ஏ. மரியதாசு.

பம்பாயில்

கண்ணம்மா--தங்கராசு நிகழ்ச்சிகள்

சன. 13, 14 : மாலை 6 மணி—தாராவி மனோகரன் மன்றம்; 15: மான்கூர்டு; 16: மாலை 6 மணி—ஓர்லி எம்.ஜி.ஆர். மன்றம்; 17: மாலை 6 மணி-இலக்குமி தெரு எம்.ஜி ஆர். மன்றம்; 21: ஆமதாபாத்.